**S.C. No.126/2013**

**எதிரி ஆஜர்.**

**அ.சா.1 திருமதி. மாயா, க/பெ. நாராயணசாமி**

**தேதி-04.08.2025**

**அ.சா.1 இன்று மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-**

சம்பவம் நடந்தது எப்போது என்றால் எனக்கு தெரியாது. சுமார் 10 வருடங்கள் இருக்குமா என்றால் தெரியாது. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தது இரவு நேரம். சம்பவம் நடந்த போது மின்சாரம் இருந்ததா என்றால் அந்த இடத்தில் கரண்ட் இல்லை. சம்பவ நேரத்தில் நான் என் மகன் ஆகியோர் எங்கு இருந்தோம் என்றால் வீட்டில் தூங்கிக் கொண்டு இருந்தோம், எங்களுக்கு தெரியாது. என் கணவருக்கு எப்படி அடிப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் வீட்டிலிருந்து சத்தம் கேட்டு தான் வந்தேன் என்றால் சரிதான்.

மருத்துவமனைக்கு என் கணவரை அழைத்துச் சென்றோமா என்றால் அழைத்துச் சென்றோம். மருத்துவமனையில் போலீசார் என்னிடம் கையெர்பபம் பெற்றார்களா என்றால் கையொப்பம் பெற்றார்கள், ஆனால் அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது, போலீசார் சொல்லி தான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை** - இல்லை.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Fast Track Court, Arani.